பத்திரிக்கைக் குறிப்பு

# இந்திய ரிசர்வ் வங்கி

www.rbi.org.in
e-mail: helpprd@rbi.org.in

**பத்திரிக்கைத்தொடர்பு அலுவலகம்,**
மத்திய அலுவலகம், தபால் பெட்டி எண் 406,
மும்பை – 400 001.

**ஜனவரி 30, 2003**

## பன்னாட்டுக் கடன் அட்டைகள் பயன்படுத்தலில் மேலும் தாராள மையம்

இந்தியா வாழும் தனிநபர் அல்லது நிறுவனங்கள் இந்தியாவிலுள்ள கடன் அட்டை வழங்குவோரிடமிருந்து பன்னாட்டுக் கடன் அட்டை வசதிகளைப் பெறலாம். அவ்வாறு வழங்குவோர் கடன்குறித்த அவர்களது கருத்திற்கேற்ப அக் கடன் அட்டைகளுக்குரிய உயர் கடன் அளவை முடிவு செய்கிறார்கள். இந்தியாவில் வாழ்வோரது நடப்புக் கணக்குப் பரிமாற்றத்தில் அந்நியச் செலாவணி பெறுவதை மேலும் தாராளமாக்கும் முயற்சியில் தனிப்பட்ட பயணத்துக்கு ஒரு நாட்காட்டி ஆண்டில் அமெரிக்க டாலர் 10000 க்கு, வணிகம்சார் பயணத்துக்கு அமெரிக்க டாலர் 2500 க்கு மிகாமலும் பனனாட்டு மாநாடுகள்/ பயிற்சிகள் /மருத்துவ வசதிகள் வெளிநாட்டுப் பயணம் ஆகியவற்றுக்கு இந்திய ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி பெறவேண்டும் எனும் நிபந்தனை இல்லை. பன்னாட்டுக் கடன் அட்டை மூலம் இவ்வகையான செலவினங்களுக்குச் செலவிடும்போது அவை இந்திய ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்குள் அடங்கா. அட்டை வழங்குவோர் குறிப்பிட்ட உயர்கடன் வரம்பிற்குட்பட்டு இவ்வசதி இந்தியாவில் வாழும் எல்லோருக்கும் உள்ளது.

அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டப்படி கடன் அட்டையைப் பயன்படுத்தி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செலவிடப்படும் தொகைக்கு தனிப்பட்ட வரம்பு எதையும் இந்திய ரிசர்வ் வங்கி குறிப்பிடவில்லை என்பது தெளிவாக்கப்படுகிறது.

ஜூன் 27, 2002 நாளிட்ட இந்திய ரிசர்வ் வங்கியின் AP (DIR Series) சுற்றறிக்கை எண் 53இல் குறிப்பிட்டபடி, வெளிநாட்டுப் பயணம் தொடர்பான செலவினங்கள் தவிர பன்னாட்டுக் கடன் அட்டையைப் பயன்படுத்தி இணையக் கொள்முதலில் ஏற்படும் செலவினங்களுக்குரிய அந்நியச் செலாவணியை அங்கீகரிக்கப்பட்ட இந்திய வணிகரிடமிருந்து பெறலாம். எ.கா.: நூல்கள்

இறக்குமதி, பதிவிறக்கம் செய்யும் மென்பொருள் கொள்முதல் அல்லது ஏற்றுமதி இறக்குமதிக்கொள்கைக்கு ஏற்ப செய்யப்படும் இன்ன பிற இறக்குமதிகள் அனுமதிக்கப்படுகின்றன. பன்னாட்டுக் கடன் அட்டைகளைப் பயன்படுக்கி இணையம் மூலம் செய்யப்படும் செலவினங்களுக்குப் பண அடிப்படையிலான ஒட்டுமொத்த வரம்பு ஏதுமில்லை.

எனினும் கடன் அட்டையைப் பயன்படுத்தி இணைய வழியாக அல்லது வேறு வழிமுறையில் பரிசுச் சீட்டுகள், தடை செய்யப்பட்ட ஏடுகள் வாங்குதல், சூதாட்டதில் பங்கேற்றம், மின் அழைப்பு சேவைக் கட்டணங்கள் போன்றவை அந்நியச் செலாவணி மறுக்கப்பட்ட செயல்பாடுகளாகும். எனவே அத்தகைய செலவினங்களுக்கு அனுமதி இல்லை.

அல்பனா கில்லாவாலா
பொது மேலாளர்

**பத்திரிகை வெளியீடு-2002003/800**